**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**முன்னிலை: திருமதி.S.சுசீலா, பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம்**

**2025-ம் வருடம் செப்டம்பர் மாதம் 26-ம் நாள் வெள்ளிக்கிழமை**

**(2056 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் புரட்டாசி மாதம் 10-ம் நாள்)**

**இ.ம.எண்.4/2022 in அசல் வழக்கு எண்.99/2020**

1. கண்ணம்மாள்

2. சாம்பசிவம் --------- மனுதாரர்கள் / வாதிகள்

/எதிர்/

1. விசாலாட்சி --------- எதிர்மனுதாரர் / பிரதிவாதி

2. S. தியாகராஜன்

3. S. மோகன்ராஜ்

4. நிர்மலா

5. சந்திரமுகி

6. குமுதா

7. நாகரத்தினம்

8. யத்தீஸ்குமார்

9. M.தனசேகர்

10. மகேஸ்வரி

11. நில அளவையர் / நகர சார் ஆய்வாளர், சத்தியமங்கலம் நகராட்சி

12. ஆணையர், சத்தியமங்கலம் நகராட்சி

13. வட்டாட்சியர், சத்தியமங்கலம்

14. சார்பதிவாளர், சத்தியமங்கலம்

---------- உத்தேசகட்சிக்காரர் / 2-14 பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 28.07.2025 அன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்து மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.தங்கராஜன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.முரளிதரண் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 6ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திருமதி.J.நூர்ஜகான் அவர்கள் ஆஜராகியும், 7, 8ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ராஜீவ்காந்தி அவர்கள் ஆஜராகியும், 9, 10-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.பிரகாஷ்பாலாஜி அவர்கள் ஆஜராகியும், 11 முதல் 14ம் எதிர்மனுதாரர்கள் தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டும், இரு தரப்பு வாதுரை மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.,

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் கட்டளை 1 விதி 10 மற்றும் பிரிவு 151-ன்கீழ் மனுவில் கண்டுள்ள உத்தேசகட்சிக்காரர்களை வழக்கில் 2 முதல் 14ம் பிரதிவாதிகளாக கட்சி சேர்க்க அனுமதி யளித்து உத்தரவிட வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்.**

**1.1** அசல் வழக்கானது மனுதாரர்கள் / வாதிகள், 1ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதி மீது விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மனுதாரர் தாவா சொத்தில் இருந்தபோது, சத்தியமங்கலம் கனரா வங்கி மேலாளர் தாவா சொத்தினை பார்த்துக் கொண்டிருந்தார். மனுதாரர் சென்று கேட்டபோது எம்.தனசேகர் என்பவர் தாவா சொத்து குறித்து கடன் கேட்டுள்ளதாகவும், அதனால் சொத்தினை பார்வையிட வந்துள்ளதாகவும் கூறினார்.

**1.2** அதனால், தாவா சொத்து எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றும், அவர் காலமானதால் அவரது வாரிசுகளான 2ம் மனுதாரராகிய தனக்கம், 1ம் மனுதாரருக்கும் பாத்தியப்பட்டது என்றும் கூறினார். அதற்கு வங்கி மேலாளர் தனசேகரன் பெயரிலும், அவரது மனைவி பெயரிலும் தாவா சொத்து குறித்து ஆவணம் இருப்பதாகவும், வங்கிக்கு வந்தால் காண்பிப்பதாகவும் கூறினார். மனுதாரர் வங்கிக்கு சென்று பார்த்தபோது, தாவா சொத்தினை 20.01.2019ம் தேதியில் சத்தியமங்கலம் சார்பதிவக ஆவண எண்.1104/2019 ஆவணத்தின் மூலம் S.N.சண்முகம் வாரிசுகளிடமும், S.N.கெம்பையன் வாரிசுகளிடமும் எம்.தனசேகர் கிரையம் பெற்றும், மேற்படி ஆவணத்தை வைத்து அவரது மனைவி மகேஷ்வரி பெயரில் மேற்படி சொத்தினை 16.06.2020ம் தேதியில் சத்தியமங்கலம் சார்பதிவக ஆவண எண்.2697/2020 ஆக கிரையம் கொடுத்தும், மேற்படி ஆவணங்களை வைத்து கடனுக்கு விண்ணப்பித்துள்ளார்.

**1.3** தாவா சொத்தானது மனுதாரரின் தந்தை ராஜனுக்கு 06.09.2007ம் தேதியிட்ட சத்தியமங்கலம் சார்பதிவக ஆவண எண்.4195/2007ன் படி கிரைய வகையில் பாத்தியப்பட்டதாகும். மேற்படி, தாவா சொத்து ஆதியில் கெம்பைய்யா, சண்முகம்

ஆகியோர்களுக்கு 1977-ம் தேதிய பாகசாசனப்படி பாத்தியப்பட்டதாகும். மேற்படி பாகசாசனம் எழுதிய போது கெம்பைய்ய, சண்முகம் ஆகியோர்களுக்கு (ப.க.ச.172A/1) பு.க.ச.எண்.339/3 ல் 10 செண்ட் மட்டுமே கூட்டாக பாத்தியப்பட்டதாகும். 1977 தேதிய பாகசாசனத்தில் தாவா சொத்தின் விஸ்தீரணம் 10 செண்ட் என்பதற்கு பதிலாக 20 செண்ட் என்று தவறாக ஏற்படுத்தியுள்ளார்கள்.

**1.4** மேற்படி, கிணற்றில் உள்ள 10 எச்.பி மின்மோட்டாரில் 1/8 பங்கும், அதற்கான காப்பீட்டுத்தெகையில் 1/8 பங்கும், விவசாய உபயோகத்திற்கான 2 அங்கண வில்லை சாலையில் பொதுவில் பாதியும், மேற்படி கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து செல்லும் உத்தி வாரி, வாய்க்கால் தண்ணீர்பாய்ச்சிக் கொள்ளும் உரிமையும், மாவடை, மரவடை சகிதம் என்று கண்டு நடராஜகவுடரின் வாரிசுகளான கெம்பையாவும், அவரது குடும்பத்தாரும், சண்முகத்தின் வாரிசுகளும் சேர்ந்து கிரையம் கொடுத்துள்ளார்கள். க.ச.339/3 ல் மேற்படியார்களுக்கு 10 செண்ட் பூமி மட்டுமே பாத்தியப்பட்டது என்றுள்ளது.

**1.5** இந்நிலையில், நடராஜகவுடரின் வாரிசுகளான கெம்பையாவும், அவரது குடும்பத்தாரும், சண்முகத்தின் வாரிசுகளும் சேர்ந்து அவர்களுக்கு பாத்தியப்பட்ட 10 செண்ட் சொத்தை முழுவதுமாக கிரையம் கொடுத்துவிட்டு, எவ்வித பூமியும் வைத்துக் கொள்ளாத நிலையில் க.ச.339/3 ல் தனசேகருக்கு 20.02.2019 ம் தேதிய ஆவண எண்.1104/2019 ஆகவும், அவரது மனைவி மகேஷ்வரி பெயரில் மேற்படி சொத்தினை 16.06.2020 ம் தேதியில் ஆவண எண்.2697/2020 ஆக கிரையம் கொடுத்த ஆவணங்கள் செல்லாததாகும். மேற்படி சங்கதிகள் தாவா தாக்கல் செய்த பின்னிட்டுதான் தெரியவந்தது. அதனால் மேற்படி சங்கதிகளை தாவாவில் திருத்தம் செய்ய வேண்டியதும், சேர்க்க வேண்டியதும், மேற்படி தனசேகர் மற்றும் மகேஷ்வரியையும், அவர்களுக்கு கிரையம் கொடுத்தவர்களையும், நகராட்சி ஆவணங்களிலும், வருவாய் துறை ஆவணங்களிலும், பதிவு செய்துள்ள ஆணையாளர், சத்தியமங்கலம் நகராட்சி மற்றும் வட்டாட்சியர், ஆவணத்தை பதிவு செய்த சார்பதிவாளர், ஆகியோர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க வேண்டியது அவசியமாய் உள்ளது. எனவே மேற்படி வழக்கில் உத்தேசக் கட்சிக்காரர்களை 2 முதல் 14 ம் பிரதிவாதிகளாக சேர்க்க உத்தரவு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.**

**2.1** மனுதாரரின் மனு மோசடியானது, சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் உண்மையல்ல. அசல் வழக்கு வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ளது. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வருவாய் ஆவணங்களில் உள்ள 3-ம் தரப்பினர்களின் பெயர்கள் குறித்து குறுக்குவிசாரணை செய்த பிறகு, பின்னர் யோசனை செய்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், கடந்த 31.03.1977-ம் தேதிய

சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலக பாகப்பிரிவினை ஆவண எண்.583/1977-ன் படி A அட்டவணை சொத்து சண்முகத்திற்கும், C அட்டவணை சொத்து கெம்பையாவிற்கும், என S.F.No.172A/1-ல் 80 செண்டில் பகுதியாக ¼ அதாவது 20 சென்ட் பூமியானது கெம்பையா மற்றும் சண்முகத்திற்கு கூட்டாக ஒதுக்கப்பட்டது. அதன்படி கெம்பையா மற்றும் சண்முகத்திற்கு தலா 10 செண்ட் உரிமை உள்ளது. அதன்படி சண்முகத்தின் குடும்பத்தாரும் கெம்பையாவின் குடும்பத்தாரும் சேர்ந்து தங்களுக்கு பாத்தியப்பட்ட 20 செண்ட் சொத்தை 3-ம் தரப்பினர்களுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளனர்.

**2.2** மனுதாரர் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யாமல் வா.சா.1-ஐ குறுக்குவிசாரணை செய்த பிறகு, இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் குறுக்கு விசாரணையில், தாவா சொத்துக்கள் மூன்றாம் தரப்பினர்களுக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என ஒப்புக்கொண்ட பிறகு, தற்போது இம்மனுவை தாக்கல் செய்து அசல் வளக்கினை திருத்தம் செய்ய முயல்வது ஏற்கத்தக்கதல்ல. மனு அனுமதித்தால் அசல் வழக்கின் தன்மை வழக்கு மூலம் மாறுபடும். மூன்றாம் தரப்பினரின் சொத்தை அபகரிக்க வேண்டி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3. 2 முதல் 6-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.**

**3.1** மனுதாரரின் மனு மோசடியானது, சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் உண்மையல்ல. அசல் வழக்கு வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ளது. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வருவாய் ஆவணங்களில் உள்ள 3-ம் தரப்பினர்களின் பெயர்கள் குறித்து குறுக்குவிசாரணை செய்த பிறகு, பின்னர் யோசனை செய்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், கடந்த 31.03.1977-ம் தேதிய சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலக பாகப்பிரிவினை ஆவண எண்.583/1977-ன் படி A அட்டவணை சொத்து சண்முகத்திற்கும், C அட்டவணை சொத்து கெம்பையாவிற்கும், என S.F.No.172A/1-ல் 80 செண்டில் பகுதியாக ¼ அதாவது 20 சென்ட் பூமியானது கெம்பையா மற்றும் சண்முகத்திற்கு கூட்டாக ஒதுக்கப்பட்டது. அதன்படி கெம்பையா மற்றும் சண்முகத்திற்கு தலா 10 செண்ட் உரிமை உள்ளது. அதன்படி சண்முகத்தின் குடும்பத்தாரும் கெம்பையாவின் குடும்பத்தாரும் சேர்ந்து தங்களுக்கு பாத்தியப்பட்ட 20 செண்ட் சொத்தை 3-ம் தரப்பினர்களுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளனர்.

**3.2** மனுதாரர் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யாமல் வா.சா.1-ஐ குறுக்குவிசாரணை செய்த பிறகு, இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் குறுக்கு விசாரணையில், தாவா சொத்துக்கள் மூன்றாம் தரப்பினர்களுக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என ஒப்புக்கொண்ட பிறகு, தற்போது இம்மனுவை தாக்கல் செய்து அசல்

வளக்கினை திருத்தம் செய்ய முயல்வது ஏற்கத்தக்கதல்ல. மனு அனுமதித்தால் அசல் வழக்கின் தன்மை வழக்கு மூலம் மாறுபடும். மூன்றாம் தரப்பினரின் சொத்தை அபகரிக்க வேண்டி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4. 7 மற்றும் 8-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.**

**4.1** மனுதாரரின் மனு மோசடியானது, சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் உண்மையல்ல. அசல் வழக்கு வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ளது. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வருவாய் ஆவணங்களில் உள்ள 3-ம் தரப்பினர்களின் பெயர்கள் குறித்து குறுக்குவிசாரணை செய்த பிறகு, பின்னர் யோசனை செய்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், கடந்த 31.03.1977-ம் தேதிய சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலக பாகப்பிரிவினை ஆவண எண்.583/1977-ன் படி A அட்டவணை சொத்து சண்முகத்திற்கும், C அட்டவணை சொத்து கெம்பையாவிற்கும், என S.F.No.172A/1-ல் 80 செண்டில் பகுதியாக ¼ அதாவது 20 செண்ட் பூமியானது கெம்பையா மற்றும் சண்முகத்திற்கு கூட்டாக ஒதுக்கப்பட்டது. அதன்படி கெம்பையா மற்றும் சண்முகத்திற்கு தலா 10 செண்ட் உரிமை உள்ளது. அதன்படி சண்முகத்தின் குடும்பத்தாரும் கெம்பையாவின் குடும்பத்தாரும் சேர்ந்து தங்களுக்கு பாத்தியப்பட்ட 20 செண்ட் சொத்தை 3-ம் தரப்பினர்களுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளனர்.

**4.2** மனுதாரர் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யாமல் வா.சா.1-ஐ குறுக்குவிசாரணை செய்த பிறகு, இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் குறுக்கு விசாரணையில், தாவா சொத்துக்கள் மூன்றாம் தரப்பினர்களுக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என ஒப்புக்கொண்ட பிறகு, தற்போது இம்மனுவை தாக்கல் செய்து அசல் வளக்கினை திருத்தம் செய்ய முயல்வது ஏற்கத்தக்கதல்ல. மனு அனுமதித்தால் அசல் வழக்கின் தன்மை வழக்கு மூலம் மாறுபடும். மூன்றாம் தரப்பினரின் சொத்தை அபகரிக்க வேண்டி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**5. 9 மற்றும் 10-ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.**

**5.1** மனுதாரரின் மனு மோசடியானது, சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் உண்மையல்ல. அசல் வழக்கு வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ளது. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வருவாய் ஆவணங்களில் உள்ள 3-ம் தரப்பினர்களின் பெயர்கள் குறித்து குறுக்குவிசாரணை செய்த பிறகு, பின்னர் யோசனை செய்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், கடந்த 31.03.1977-ம் தேதிய

சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலக பாகப்பிரிவினை ஆவண எண்.583/1977-ன் படி A அட்டவணை சொத்து சண்முகத்திற்கும், C அட்டவணை சொத்து கெம்பையாவிற்கும், என S.F.No.172A/1-ல் 80 செண்டில் பகுதியாக ¼ அதாவது 20 சென்ட் பூமியானது கெம்பையா மற்றும் சண்முகத்திற்கு கூட்டாக ஒதுக்கப்பட்டது. அதன்படி கெம்பையா மற்றும் சண்முகத்திற்கு தலா 10 செண்ட் உரிமை உள்ளது. அதன்படி சண்முகத்தின் குடும்பத்தாரும் கெம்பையாவின் குடும்பத்தாரும் சேர்ந்து தங்களுக்கு பாத்தியப்பட்ட 20 செண்ட் சொத்தை 3-ம் தரப்பினர்களுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளனர்.

**5.2** மனுதாரர் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யாமல் வா.சா.1-ஐ குறுக்குவிசாரணை செய்த பிறகு, இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் குறுக்கு விசாரணையில், தாவா சொத்துக்கள் மூன்றாம் தரப்பினர்களுக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என ஒப்புக்கொண்ட பிறகு, தற்போது இம்மனுவை தாக்கல் செய்து அசல் வளக்கினை திருத்தம் செய்ய முயல்வது ஏற்கத்தக்கதல்ல. மனு அனுமதித்தால் அசல் வழக்கின் தன்மை வழக்கு மூலம் மாறுபடும். மூன்றாம் தரப்பினரின் சொத்தை அபகரிக்க வேண்டி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும்

**6.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**7.** மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**8. தீர்வு**

**8.1** அசல் வழக்கானது மனுதாரர் / வாதியால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் மனு சொத்து மனுதாரரின் தந்தை ராஜனுக்கு 06.09.2007-ம் தேதியிட்ட கிரைய ஆவண எண் 4195/2007-ன் படி பாத்தியப்பட்டது. தாவா சொத்து ஆதியில் கெம்பையா மற்றும் சண்முகம் ஆகியோர்களுக்கு 1977 ஆண்டு பாகசாசன படி பாத்தியப்பட்டது. மேற்படி பாகசாசனம் எழுதியபோது கெம்பையா மற்றும் சண்முகம் ஆகியோர்களுக்கு பு.க.ச.எண்.339/3, ப.க.ச.172A/1 -ல் 10 செண்ட் மட்டுமே கூட்டாக பாத்தியப்பட்டது. ஆனால் பாகசாசனத்தில் 10 செண்ட்க்கு பதிலாக 20 செண்ட் என தவறாக ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும், கெம்பையா மற்றும் அவரது குடும்பத்தாரும் சண்முகம் வாரிசுகளும் சேர்ந்து க.ச.எண்.339/3-ல் 10 செண்ட் முழுவதையும் கிரயம் கொடுத்து விட்டனர். அந்த பூமியில் அவர்களுக்கு வேறு சொத்து இல்லாத நிலையில், வழக்கில் உத்தேச தரப்பினரான தனசேகரன், மகேஸ்வரி ஆகியோர்களுக்கு சத்தியமங்கலம் சார் பதிவாக ஆவண எண். 1104/2019, 2697/2020 கிரைய ஆவணங்கள் படி தாவா சொத்து எழுதி

கொடுக்கப்பட்டுள்ளது. எனவே தனசேகரன் மற்றும் மகேஸ்வரியையும், அவர்களுக்கு கிரயம் செய்து கொடுத்த நபர்களையும், அந்த ஆவணங்களை பதிவு செய்த பதிவாளர் மற்றும் அத்துடன் இணைந்த வருவாய்த்துறை அதிகாரிகள் நில அளவையர் ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், மனுவை அனுமதிக்குமாறும் வாதம் செய்யப்பட்டுள்ளது.

**8.2** எதிர்மனுதாரர்கள் தரப்பில், அசல் வழக்கு வாதி தரப்பு கூடுதல் சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ளது. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வருவாய் ஆவணங்களில் உள்ள 3-ம் தரப்பினர்களின் பெயர்கள் குறித்து குறுக்குவிசாரணை செய்த பிறகு, பின்யோசனை செய்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், கடந்த 31.03.1977-ம் தேதிய சத்தியமங்கலம் சார்பதிவாளர் அலுவலக பாகப்பிரிவினை ஆவண எண்.583/1977-ன் படி A அட்டவணை சொத்து சண்முகத்திற்கும், C அட்டவணை சொத்து கெம்பையாவிற்கும், என S.F.No.172A/1-ல் 80 செண்டில் பகுதியாக ¼ அதாவது 20 சென்ட் பூமியானது கெம்பையா மற்றும் சண்முகத்திற்கு கூட்டாக ஒதுக்கப்பட்டது என்றும், அதன்படி கெம்பையா மற்றும் சண்முகத்திற்கு தலா 10 செண்ட் உரிமை உள்ளது. அதன்படி சண்முகத்தின் குடும்பத்தாரும் கெம்பையாவின் குடும்பத்தாரும் சேர்ந்து தங்களுக்கு பாத்தியப்பட்ட 20 செண்ட் சொத்தை 3-ம் தரப்பினர்களுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளனர் என்றும், மனுதாரர் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யாமல் வா.சா.1-ஐ குறுக்குவிசாரணை செய்த பிறகு, இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் குறுக்கு விசாரணையில், தாவா சொத்துக்கள் மூன்றாம் தரப்பினர்களுக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என ஒப்புக்கொண்ட பிறகு, தற்போது இம்மனுவை தாக்கல் செய்து, அசல் வழக்கினை திருத்தம் செய்ய முயல்வது ஏற்கத்தக்கதல்ல. மனு அனுமதித்தால் அசல் வழக்கின் தன்மை மற்றும் வழக்கு மூலம் மாறுபடும். மூன்றாம் தரப்பினரின் சொத்தை அபகரிக்க வேண்டி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரரின் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என வாதம் செய்யப்பட்டுள்ளது.

**8.3** அசல் வழக்கானது கடந்த 03.11.2008 தேதியிட்ட பிழைதிருத்தல் ஆவணத்தில், B அட்டவணை சொத்து விவரத்தை, பிழைதிருத்தம் செய்யக்கோரி விளம்புகை மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது தற்போது வா.சா.1-ன் கூடுதல் சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ளது. தற்போது தாவா சொத்துக்களை 9 மற்றும் 10-ம் உத்தேசத் தரப்பினர்களுக்கு கிரையம் செய்து கொடுத்தது செல்லாது எனவும், எனவே உத்தேச தரப்பினர்கள் அவசிய தரப்பினர்கள் எனவும், தாவா சொத்து விவரத்தில் உள்ள சொத்துக்களை விற்பதற்கு, சண்முகம் மற்றும் கெம்பையா குடும்பத்தாருக்கு உரிமை இல்லை எனவும், அவர்களின் 1977-ம் ஆண்டு பாகப்பிரிவினை

பத்திரத்தின் படி க.ச.339/3-ல் கூட்டாக 10 செண்ட் மட்டுமே பாத்தியப்பட்டது எனவும், ஆனால் அவர்களது வாரிசுகள் கூடுதலாக சொத்தில் உரிமை இல்லாமல், மூன்றாம் தரப்பினர்களுக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும், எனவே சண்முகம் மற்றும் கெம்பையா குடும்பத்தினரிடம் இருந்து கிரையம் பெற்றவர்கள் மற்றும் விற்பனை செய்தவர்கள், பதிவாளர், வருவாய் துறை அலுவலர் ஆகிய உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் 2 முதல் 14 பிரதிவாதிகளாக சேர்க்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

**8.4** அசல் வழக்கில் தீர்மாணிக்க வேண்டிய பிரச்சனையானது கடந்த 03.11.2008 தேதியிட்ட பிழைதிருத்தல் ஆவணத்தின் B அட்டவணை சொத்துவிவரத்தில் " தற்கால டவுன் சர்வே படி T.S.No.16814, T.S.No.18, T.S.No.29 எண்களுக்கு சரியான டவுன் சர்வே எண்கள் T.S.No.169, T.S.No.171, T.S.No.172. T.S.No.173, T.S.No.177 " என்று விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா என்பதேயாகும் . இந்நிலையில், மனுதாரர்களின் வழக்குப்படி சண்முகம் மற்றும் கெம்பைய்யாவிற்கு S.F.No.172A/1-ல் கூட்டாக 10 செண்ட் பாத்தியப்பட்டுள்ளதா அல்லது எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளவாறு 20 செண்ட் பாத்தியப்பட்டதா என்பதும் அசல் வழக்கில் தீர்மாணிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும். இந்நிலையில், மனுதாரர்கள் தாவா சொத்தின் சர்வே எண்களில் திருத்தம் செய்ய கோரியுள்ள விளம்புகை பரிகாரம், மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கதா என்பதை தீர்மாணிக்காமல், திருத்தப்பட வேண்டிய சர்வே எண்களின் உரிமையாளர்களை அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு வழக்கின் தற்போதைய நிலையில் அனுமதிக்க இயலாது. மேலும், இம்மனுவுடன் உத்தேச தரப்பினர்களின் உரிமை ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. இந்நிலையில், மனுதாரர்கள் தரப்பில் உரிமையில்லாத நபர்களிடமிருந்து 9 மற்றும் 10 உத்தேச தரப்பினர்கள் தாவா சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளதாக குறிப்பிட்டு, அவர்களது ஆவணங்கள் செல்லாதது என விளம்புகை பரிகாரம் கேட்க வேண்டும் என்றும், அந்த ஆவணங்களை பதிவு செய்த பதிவாளர், வருவாய்துறை அலுவலர்களை தரப்பினராக சேர்க்க வேண்டும் என தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அசல் வழக்கின் தன்மையை மாற்றும் படியானதாக உள்ளது. அசல் வழக்கானது கடந்த 03.11.2008 தேதிய பிழை திருத்த ஆவணங்களில் B அட்டவணை சொத்தில் பிழை திருத்தல் செய்ய கோரியுள்ள விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் அனுமதிக்கத்தக்கதா, இல்லையா என்பதேயாகும். அதைப் பொறுத்து முழுமையாக தீர்வுகண்ட பின்பே, மனுதாரருக்கு தாவா சொத்தில் உரிமையுள்ளது என தீர்மாணிக்க முடியும். இந்நிலையில், அசல் வழக்கிற்கு முழுவதுமாக மாறுபட்டு, தாவா சொத்துக்களை கிரையம் பெற்றது செல்லாது எனவும், எனவே அதன் தரப்பினர்களை சேர்க்க வேண்டும் எனவும், மனுதாரர்களால் தாக்கல்

செய்யப்பட்டுள்ள இம்மனு அசல் வழக்கின் தன்மையை முழுவதுமாக மாற்றக் கூடியதாக உள்ளது. மேலும், கெம்பையா மற்றும் சண்முகம் குடும்பத்தாருக்கு க.ச.எண் 339/3-ல் கூட்டாக 10 சென்ட் மட்டுமே பாத்தியப்பட்டது, என காட்டும் விதமாக மனுதாரர் தரப்பில் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்நிலையில், இது குறித்து மாண்பமை உயர்நீதிமன்றம் முன்தீர்ப்பில்,

> **Ashok Kumar – Vs – Ramar 2018 (2) TLNJ 513(Civil) – No amendment should be entertained (1) When the nature of it is changed by permitting the amendment.**

என்ற வழக்கில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**8.5** மேற்படி முன் தீர்ப்பு இம்மனுவிற்கு பொருத்திப் பார்க்கையில் அசல் வழக்கின் தன்மையை மாற்றும் வகையில் அசல் வழக்கிற்கு தொடர்பு இல்லாத 3-ம் நபர்களை வழக்கில் தரப்பினராக சேர்ப்பது, நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது, இதனால் எதிர்மனுதாரர்கள்/ உத்தேச தரப்பினர்களுக்கு அளவிட முடியாத இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இந்நிலையில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு, வழக்கிற்கு மாறுபட்டு புதிய வழக்கு மூலம் மற்றும் வழக்கினை மாறுப்படுத்தும் வகையில் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது. எனவே இம்மனுவினை தள்ளுபடி செய்வதே நீதியின்பால் உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மாணிக்கிறது.

**9. முடிவாக மனுவானது செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2025.09.26 18:05:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

**சத்தியமங்கலம்.**

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:-** - இல்லை -

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :-** - இல்லை -

SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2025.09.26 18:06:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,

**சத்தியமங்கலம்.**

FAIR ORDER

I.A.No.4 / 2022

O.S.No.99 / 2020

26 / 09 / 2025